







ஓலை 80| ஓசை 203| ஜூலை 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ம] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது**

## பொருள்

**இனிய சொற்கள் இன்பத்தை வழங்கும் என்பதை
உணர்ந்தவர் அதற்கு மாறாக எதற்காகக்
கடுஞ் சொற்களைப் பயன்படுத்த வேண்டும்?**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

## அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# விழுவதுவோ எழுவதற்கே!

பா வகை:இருநாற் சீரிரட்டை வியனிலைச் சிந்து

அலையதுவும் விழுகிறதே - மீண்டும்
ஆர்த்தெழுந்தே வருகிறதே அதுபோல நாமிருப்போம்
விலையில்லா துணிவினையே - நாமும்
மீட்டிடுவோம் எந்நாளும் வியப்பினிலே ஆழ்த்திடுவோம்

தோல்விகளே தொடர்ந்தாலும் - அங்கே
துவளாமல் நிமிர்ந்திடுவாய் துணைவருமே பட்டறிவும்
ஆல்போல தளைத்திடுவே - வேண்டும்
அயர்வில்லா முயற்சிகளே அதனுடனே நம்பிக்கை



கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

கல்
வரம் தர தயாராகிறது
சிலை



**சென்ரியு**

கோவில் பூஜை
தொடர்ந்து கொண்டேயிருக்கிறது
யாசிப்பு

**லிமரைக்கூ**

உண்டியல் நிரப்பும் பைகள்
கோவில் வெளியே
நீளும் கைகள்

**லிமரிக்**

மனிதனை படைத்து முடித்தான்
பெருமை கொண்டு சிரித்தான்
சிலையின் படைப்பு
மனிதன் உழைப்பு
கடவுள் குழம்பி தவித்தான்

**குக்கூ**

கோவில் நீங்கிய
பூக்காரவிதவை
ஸ்டிக்கர் பொட்டை
பத்திரப்படுத்துகிறாள்
நாளை வரும்
சுமங்கலிகளுக்காக

**பழமொன்றியூ**

கோவில் விளங்க
குடி விளங்கும்
சிறப்பு தரிசனம்
ஒருபோதும் விளங்காது

**எதுகைக் கூ**

ஆவியின் தூய்மை
காவியால் நிறைகிறது
கோவில் மடம்

**மோனைக் கூ**

அர்ச்சனை கூடை
அபராத தொகை சுமக்கிறது
அர்ச்சனை சீட்டு

**விடுகவிக் கூ**

காலணிகளை இங்கே விடவும்
தொன்று தொட்டு தொடர்கிறது
கோவில் சுதந்திரம்

**மணிக் கூ**

படிக்கட்டுகளின் அம்மா தாயே
கருவறைக்கு முன்
ஆண்டவா என்றாகிறது

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# தரிசனம்

எழுத்துத் தூரிகை எத்தனைச் சித்திரங்களை எழுதினாலும்
இயற்கையின் கை எனக்குக் கிட்டவில்லை.



எண்ண ஓட்டத்தில் வெற்றிக் கோடுகளை
எத்தனை முறை தாண்டினாலும்
இயற்கையின் எல்லை எட்டவேயில்லை.

கனவுக் கோபுரங்களில்
கற்பனைக் குதிரை ஏறிக்கொண்டே இருந்தாலும்
இயற்கையின் தரிசனம் தென்படவேயில்லை.

கண்ணீர் அலைகளை காற்றில் தூவினாலும்
மேகச்சரிகை மேனி கொண்டு
நட்சத்திரக் குழந்தைகளைப் பிரசவிக்கும்
வானமங்கை வடிவம் கிட்டுவதில்லை.

இருப்பிலிருந்தே எங்கேயோ தாவித்தாவி மனம் பறந்தாலும்
வானம் கண்ணுக்கு வசப்படுவதே இல்லை.


தேடித்தேடி இதயமெங்கும்
புதையல் சுரங்கம் புறப்பட்டாலும்
இயற்கையின் ஜொலிப்பு இன்னும் கிட்டவில்லை.

கோடிக்கணக்காய் எழுத்துப்பிண்டங்கள்
வாயிலிருந்து விழுந்தாலும்
இயற்கையின் வார்த்தை வசப்படவில்லை

வலைவீசித் தேடியும் கிடைக்காத துயரில்
இயற்கையே பரிசாய்
மழலையில் விழுந்து மனதை நனைக்கிறது.

கவிஞர் இளையவன் சிவா, நரசிங்காபுரம்

சுடரேற்றியதும் பயம் போயிருக்கும்.
அறையினுள் தனியாய் இருந்த
இருட்டுக்கு.
/
என்னிடத்தில் இருந்தபடி நீயும்;
உன்னிடத்தில் இருந்தபடி நானும்;
இருவரும் ஒருவரான நாளில்.
நமக்குள் எல்லாமும் சாத்தியம்.
/
உன் பூப்போட்ட குடையை
ரசிப்பதற்கென்றே
மழையாய் அவதரிக்கின்றன
முகில்கள்.
/
முதியவர் வசிக்கும் வீடு
யாருமில்லை
முட்டாள்.
/
தாவும் மனது
நிரூபணம் ஆனது.
குரங்கிலிருந்தே மனிதன்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# மணிமேகலை

## (இருபத்தி இரண்டு)

**21 . கந்திற்பாவை வருவது உரைத்த காதை**

மணிமேகலை தன்னிறைவு உரை :
கோயிலினுள்ளே துயின்ற மணிமேகலை திடீரென எழுந்தாள் .
காயசண்டிகை வடிவத்தை நீக்கி மணிமேகலை தோன்றினாள்
மாயவனால் வெட்டுண்ட அரசகுமரனை நினைத்து அழுதாள்
"தூய உன் காதலை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. உணர்க"
மணிமேகலா தெய்வம் என் நிலை கண்டு எடுத்துச் சென்றது.
மணிபல்லவத் தீவில் என்னை பாதுகாப்பாக கொண்டு சென்றது
பணிவோடு புத்தபீடிகை வணங்கி என் பிறப்பு உணர்ந்தேன்
துணிவோடு நீ என்னை நெருங்க, காயசண்டிகை உரு பெற்றேன்



அங்கு வந்த விஞ்சையன் தன் மனைவி என்று பின் தொடர்ந்தான்
இங்கு என்னோடு உன்னைக் கண்டு உன் மீது சீற்றம் கொண்டான்
தீங்காக வெகுண்டு, தவறாக உணர்ந்து உன்னை வெட்டிவிட்டான் .
எங்கும் பூமிஇயல்பு பிறந்தவர் இறப்பதும் இறந்தவர் பிறப்பதும்

முற் பிறப்பில் கணவன் இராகுலன் பாம்பு தீண்டி இறந்தான
இப்பிறப்பில் காதலன் வெட்டுண்டு இறந்தான் என்னே என் விதி
தப்பிக்க வழியின்றி வினைப் பயன் தொடர் கதையா என்ன?
அப்பொழுது கந்திற்பாவை, " காரணம் கூறுகிறேன் கேட்பாயாக ."

பிரமதருமன் முனிவன் காயங்கரை ஆற்றின் கரையில் வசித்தான்
தருமத்தின் தலைவன் வீட்டுக்கு விருந்துக்கு அழைத்தான் இராகுலன்
தரமான அறுசுவை உணவை பாழ்படுத்தி விட்டான் சமையல்காரன்
இராகுலன் கோபத்தில் அவனை வெட்டி வீழ்த்தினான் வினை தொடருது,
உன் கரம் பற்ற நினைத்த உன் காதலன் இறையானான் இப்போது ।

கந்திற்பாவை மேலும் கூறியது
"மன்னவன் மகன் உதயகுமரன் கொலையுண்டதால் உன் மீது கோபம்
உன்னை காவலில் வைத்து சிறையிடுவான், அரசி மாதேவி துணையாவாள்
தன்னுடன் வைத்துக் கொள்வாள் அறவண அடிகள் உண்மை கூற கேட்டு
உனக்கு விடுதலை கிடைக்கும் மீண்டும் மணிபல்லவம் செல்வாய்"

அங்கு ஆபுத்திரனை சந்திப்பாய், பாத்திரம் ஏந்தி பசிப்பிணி நீக்குவாய்
எங்கும் உன் புகழ் பரவ தவ முனிவர் வடிவில் வஞ்சி மா நகர் வருவாய்
இங்கு திரண்டுவரும் மக்களின் பசி நீங்க மனதார போற்றுவார்கள்
அங்கே சமய வாதிகளின் பொய்யுரைகளுக்கு மெய்யுரைகள் போதிப்பாய்.

நகர் காஞ்சி மழை இன்றி பஞ்சம் தலை விரித்தாட மக்கள் அவதியுற
அகம் மகிழ்ந்து நகர் சென்று ,வாடும் மனிதர்களுக்கு உணவு தருவாய்
நகமும் சதையாக பிணியில் வாடும் மக்களுக்கு மருந்தாக இருப்பாய்
சுகம் தேடும் சமயவாதிகளுக்கு புத்தனின் அறிவுரைகள் கூறுவாய்

பாவை சொல்லியதைக் கேட்டு மணிமேகலை தன் கடமை உணர்ந்தாள்
கோர்வையாக நடந்த உதயகுமரன் மரண வருத்தங்கள் களைந்தாள்
"சாவை நேசிக்கும் ஞானியாக புத்தனின் முதல் மாணாக்கனாக மாறுவாய்
பூவை பற்றற்றுநிர்வாணமான முக்தி நிலை எய்துவாய்" கந்திற்பாவை

**தொடரும்...**

கவிஞர் ந. திருக்காமு

# அமைச்சு

## அதிகாரம் : 64

உற்றகருவியும் உரியகாலமும்
செயல்வகையும் செயற்சிறப்பும்.
கருத்தாயறிந்து சிந்திப்போரே
பெருமையுடைய அமைச்சனாம்.

மனதிடனும் நற்குடிப்பிறப்பும்
அறநெறிகற்றலும் குடிகாத்தலும்.
விடாமுயற்சியுமாம் இவ்வைந்தும்
சிறக்கப்பெற்றோனே அமைச்சனாம்.




பகைபிரித்தலும் தம்மவர்பிரியாமையும்
பிரிந்தநல்லோரை கூட்டிச்சேர்த்தலும்.
ஆகியதிறன்கொண்ட வல்லோனே
பெருமைக்குறிய அமைச்சனாம்.

செயல்வகை ஆராய்தலும்
நல்வழியை ஆய்ந்தறிதலும்.
ஐயத்திற்கிடமின்றி துணிந்துரைக்க
வல்லோனுமே அமைச்சனாம்.

அறமறிந்து அறிவுநிறைந்து
சொற்செல்வனாய் செயலாற்றும்.
திறனறிந்த அமைச்சனே
அரசிற்கு உற்றதுணையாம்.

நுண்ணறிவும் நூலறிவும்
ஒருங்கேயுடைய அமைச்சிற்கெதிரே.
நுட்பமான சூழ்ச்சிகளெல்லாம்
நிற்கவியலாது ஓடிவிடும்.

நூலறிவால் நுண்ணறிவு
பெற்றிருந்த போதிலும்.
உலகறிவின் இயல்பறிந்து
பொருந்தச்செய்தல் அமைச்சிற்கழகு.

அறிவுடையோர் அறிவுரையை
ஏற்காத அரசாயினும்.
உறுதிப்பொருளை அவனிடத்து
எடுத்துரைத்தலே அமைச்சின்கடனாம்.

அருகிருந்தே தீயவழிகூறும்
அறிவற்ற அமைச்சைவிட.
எழுபதுகோடி பகையோர்
அரசருகிருத்தல் தீங்கல்லவாம்.

முற்றும் ஆய்ந்தறிந்திடினும்
உற்றசெயல் திறன்களனைத்தும்.
அற்ற அமைச்சர்கள்
குற்றமானதே செய்வர்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# திறனுணர் இளைஞனே!



வாழ்க்கைப் பயணத்தில்
வாழ்ந்திடு உழைத்து.
உன்னை அறிந்திட
உலகில் உய்யலாம்.

உன்னாற்றலை நீயே
உவந்தே கண்டறி.
தென்னங்கீற்றில் தொங்கும்
தூக்கணாங் குருவிக்கூடு.

அசையும் கீற்றில்
அழகாய்த் தொங்கும்.
நெசவின் சிறப்பால்
நிலைத்தே ஆடும்.

தன்னம்பிக்கையைத் துடுப்பாக்கி
துணிவோடு பயணப்படு.
முயன்றால் அனைத்தையும்
முடிக்கலாம் நாமே.

குழந்தை விழும்
குதூகலமாய் எழும்.
நிற்கும் உடனே
நடைபழகும் ஓடும்.

தோல்வியைக் கண்டுத்
துவளாதே, நாளும்
தடைகளை அறிந்திடு
தகர்த்தெறியப் பழகிடு.

சிற்றெறும்பு உணவைச்
சுமந்தே நடக்கும்.
இடையில் வந்திடும்
இடையூறைத் தாண்டும்.

நினைத்த இடத்திற்கு
நில்லாமல் ஏகும்.
சோர்ந்து இருக்காமல்
சுறுசுறுப்புடன் செயலாற்று.

சிகரம் தொடலாம்
சிறப்புடன் வாழலாம்.

கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

# வலியை தாண்டி வழியை கண்டுபிடி

முடியும் என்று நினைத்தால்
பல வழிகள் உண்டு
முடியாது என்று நினைத்தால்
பல காரணங்கள் உண்டு

வேடிக்கை பார்த்து விமர்சனம் செய்வதை விட,
வெற்றிக்காக களத்தில் இறங்கி போராடு
தோற்றாலும், நீ தனித்துவமாய் திகழ்வாய்.

சிரித்துக் கொண்டே நகர்வதினால்,
வலிக்கவில்லை என்று அர்த்தமில்லை
வலிகளை காட்டிக் கொள்ள,
விருப்பம் இல்லை என்று அர்த்தம்.



கவிஞர் ஜெ. தேவி ராஜசேகர், சென்னை

# என் விடியலில்




வரையத் தெரியாத நான்
வண்ணங்களைக் கலந்து
வழி நெடுகத் தூவுகிறேன்
வண்ண மலர்களாக.

காலை நேரப் பூங்குயில்
கானம் பாடுகிறது
கானா வாழைகள் இங்கு
கலர்க் கனாக்களாக.

பார்த்திருந்து என்னால்
பா வடிக்க நேரமில்லை
பட்டாம் பூச்சிகள் காத்திருக்கின்றன
பல நிமிடங்களாக.

மெல்லிசை கீதங்களோடு
மெட்டெடுக்கின்றன வண்டுகள்
மெல்ல நகர்கிறேன்
மெல்லிடை நானாக.

காதல் கொள்ள இவற்றை
காதலர்களாய் காண்கிறேன்
கவி வரிகளில் கோர்க்கிறேன்
கண்கவர் காட்சிகளாக.

சிந்தை குளிர்வதாய்
சிறுமலர்களின் தரிசனத்தில்
சிறகடித்து மறைகின்றன இவள்
சிறு கவலைகள் மெதுவாக.

நாளை வருகிறேன்
நறுமணம் கமழ்ந்திட
நான் நட்ட ரோஜா மலர்கிறது
நறு முகைகளாக.

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷ், கம்பளை

# நன்னன் விழுதுகள்



முதுவேனில் ஓய்வெடுக்க
மெல்ல அரும்பும் கார்.
நிலம் செழுமையாக
செம்மழை தாலாட்டு.
சுட்ட வெளி குளிர
சுனை தூறல்.

தேடல் புதியதல்ல
தேக்கம் தெளிந்து
தடம் பதித்து செல்.
இயற்கை துணையிருக்க
எல்லாம் கிடைக்கும்.

நிறப்பிரிகை ஆளுமை
நீங்கா இன்னல் பொழுதுகள்
நெடியோன் இல்லா களம்
நனைந்து நாள்களை கடத்தும்
நன்னன் விழுதுகள்.

கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# சொக்கித்தான் போனேனே

சொக்கித்தான் போனேனே
சொக்கனே ஒன்னால
சொப்பனத்தில் வந்தவனே
மனசுக்குள்ளே நிக்குறியே

சொக்குப்பொடிப் போட்டவனே
கண்ணுக்கு நெறஞ்சவனே
வசியமாப் பேசியே
வஞ்சியத்தான் கவர்ந்திட்டியே

வரப்போரம் போனவளை
கண்ணடிச்சிக் கவுத்திட்டியே
என்ன மாயம் செஞ்சியோ
ஒம்மேல ஆசையாச்சு

ஆலமரத்துல ஊஞ்சலொண்ணு
எனக்காகக் கட்டித் தந்தாயே
பக்கத்துல ஒக்காந்துதால்
பலகதைகளைப் பேசினாயே

அத்துமீறாமத்தான் என்கிட்ட
பழகியவன் நீதானே
சினிமாகாரங்க மாதிரி
கருப்புக் கண்ணாடி போட்டு
ரசிச்சுப் பாத்தியே

கட்டழகு மேனிக்காரா
என்னோட சொந்தக்காரா
ஆளான கன்னிப் பொண்ணு
என்னை அள்ளிக்கிடப் போவதெப்போ



நல்லநாளும் பாருமய்யா
பரிசமொண்ணு போடுமய்யா
ஆவலும் கூடுதய்யா
மணவறைக் காணத்தானே

சொக்கித்தான் போனேனே
சொக்கனே ஒன்னால
மஞ்சத்தாலிக் கட்டுமய்யா
பொஞ்சாதியா ஆகிடத்தான்

ஓலைப்பாயப் போட்டுதான்
சந்தோசமா இருந்திடலாம்

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# ஜென் கூறும் கவிதை

1

விழியருவிக்கும்
மொழியருவிக்கும்
பார்வையாளானாக நிற்பவனிடம்
பந்தயம் கட்டுகிறாய்
ஒற்றைச் சிந்தனையில்
இரட்டைப் பொழிவுகளை
மடியேந்தியபடி
நனையத் துவங்கினேன் நான்.

2

எல்லா வரிகளும்
என்னிடமிருந்து
தொலைந்து போனாலும்
உனது வருகை போதும்
எனக்கான அகராதியை மீட்டுத்தர.

3


ஓவியத்தின் தூரிகை பிடிக்க
ஒவ்வாத மனதிடம்
உனது பார்வைத் தடயங்களே
கற்றுத்தரத் தொடங்குகின்றன
சித்திரத்தின் சிகரத்தை.



கவிஞர் இளையவன் சிவா

# நீ வாழ்க என்னுயிரே

இருமணம் இணைந்த உறவு திருமணம்
இறைவன் போட்ட முடிச்சு என்னுயிராவனுக்கு
அன்பையும் பண்பையும் கற்றுக் கொடுத்தவன்
உயிருக்கு உயிராய் என்னை நேசித்தவன்
எனக்காக எதையும் தியாகம் செய்வான்
அவனருகே இருப்பது எனக்கு சுகம்
இன்ப துன்பங்களில் என்னோடு இருந்தவன்
எனது வாழ்வில் பலமாக இருந்தவன்
அவனது கண்ணில் காதலைக் கண்டேன்
உயிருள்ள வரையிலும் உயிராக நேசிப்பேன்



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# விதைக்காத விதைகள்

விதைகளாய் இருந்து விருட்சமாய்
வளர வேண்டிய இளமை
கிளை ஒடிந்து ஊனமாய்

போதைப் பொருளின் மூட்டையில்
இளையோர் தினந்தோறும்
மூச்சுத்திணறலாய்

உள்ளங்கையில் உலகம் வந்ததும்
உறவுகள் எல்லாம் அலைபேசியின்
எண்களாய்

விழா காலங்கள் எல்லாம் இன்று
இளமை மதுவில் முகம் தொலைத்த
முகவரிகளாய்

லட்சியம் இல்லாத கூட்டம் இங்கே
தெருவெங்கும் தேடப்படும்
தேடல்களாய்

இன்றைய இளமையின் வாழ்வு
கருவறை தேடாத கல்லறை
பிணங்களாய்.



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# ஆசைகள் பல!

அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ
ஆசை குழந்தைகளின் இறப்பை தவிர்க்க
இல்லாதவர்களுக்கு இல்லையென்று சொல்லாமலிருக்க
ஈகைதன்மையை செல்வந்தரிடம் கற்பிக்க
உண்மையான அன்பை கண்டுபிடிக்க
ஊழல் செய்வோரை செயலற்று போக வைக்க
எளியோரை வறியோரிடமிருந்து காப்பாற்ற
ஏமாற்றுபவரிடமிருந்து தப்பித்து கொள்ள
ஐயமுள்ள கேள்விகளுக்கு விடை தேட
ஒவ்வொரு நாளும் வருமானத்திற்கு வழி தேட
ஓயும் வரை ஓடிக்கொண்டிருக்க உடலில் சக்தி இருக்க
ஔவை சொன்ன வழியில் அவ்வளவையும் கடைபிடிக்கவே!
அழகான வாழ்க்கையாக்கிட ஆசை பலவே!



கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# நீ எங்கே இருப்பாய்?



நீ எங்கே இருப்பாய்?
நீ எந்த நாட்டில் வசிப்பாய்?

இந்த நவீன உலகில் அதிவேகமாய் ஓடும் அழகோ -இல்லை
ஒளியாய் திகழ்ந்து உருகும் மெழுகோ

அதிக புன்னகைக்கு சொந்தக்காரனோ - இல்லை
அடிக்கடி கவலைகள் தீண்டும் சராசரி ஆண்தானோ

உனக்கென்று ஆசைகள் இருக்கின்றதா? - இல்லை
ஆசைகளை அடுத்த நிமிடமே தன்வசமாக்கும் அதிர்ஷ்டக்காரனா

ஆஷுக்கின் புதல்வனா - இல்லை
உன் முப்பாட்டன் கையுவின் பேரனா

நீ யார் என்று ஒன்றுமே தெரியவில்லை -ஆனாலும்
எனது புத்தகத்தில் உனக்கான பக்கங்கள் அதிகமாகவே இருக்கின்றது

எழுதும் எனக்கும், படிக்கும் உனக்கும் மட்டும்தான் தெரியும்
இது யாருக்கான வரிகள் என்று.



கவிஞர் சாதீக் பாத்திமா சுமீஹா, மூதூர், இலங்கை

# நிலை மாறும் மனிதம்

சொல்ல முடியாத
துயர பின்னணிகளே மனித வாழ்வு
வாழ்வும் வளர்ச்சியும்
வறுமையின் கோட்டை நோக்கியே
ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமல்
இனமொழி என பல
மாறுதல் இல்லாமல் மாற்றம் ஒன்று
நடுங்கிய நொடியில்
நாளுக்கு நாள் நயம் இல்லாமல்
இன்றும் நாளையும்
மனிதப் பிழைகள்
பல உயிர்களைக் கொன்றே
அதை தினம்
குறை ஒன்றி நின்று உளவு
அறியாத சுடர் தீப்பிறை
நிறம் மாறும் மாய விலை
வன்மமும் கர்மமும்
காலத்தின் பின்னணியில் மனிதப் பிழை
பழிக்குப் பழி பாகுப்பட்ட விழி வீதி ஓரம்
வீடில்லாமல் நாடும் இல்லாமல் நடமாடும்
நாளை நாளை என்று
கோட்பாடு மறந்து கொள்ளையாகிறது
மனித மனம்.



கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்

# இன்று நாளை நேற்றாக

இன்றே இயன்றதை இன்றேசெய்
நன்றேசெய் அதை இன்றேசெய்
ஒன்றுசெய் அதும் இன்றேசெய்
நாம் செய்வதை கடத்தாதே நாளையென
இடைவேளையின்றி உழைத்தாலும்
கடத்தாதே நாளையென
நேரம் பார் இன்று நாளை நேற்றாகிவிடும்
ஆற்றலை பார் இன்று நாளை நேற்றாகிவிடும்
நேற்றாக பார்த்தால் இன்று நாளை நேற்றாகிவிடும்
இக்கணமே பார் இன்று நாளை நேற்றாகிவிடும்




கவிஞர் மு.கவிபாலன் (எ) மு.சோமசுந்தரம், சிதம்பரம்

# நட்பு

(குறட் கூ)

(1)
வினையனைத்திலும் அரிய
நட்பே துணை.
(2)
நல்லோரிணக்கம் வளர்பிறை
அல்லாரிணக்கம் தேய்பிறை.
(3)
பண்புடையார் நட்பு
படிக்கும் புத்தகமென்க
(4)
வாய்ப்பேச்சு நட்பல்ல
இடித்துரைப்பதே நன்னட்பு
(5)
பெருகும் பேச்சின்
கருத்தொருமித்தலே நன்னட்பு
(6)
முகமலரும் நட்பின்
அகமலரும் நட்பே நட்பு
(7)
குற்றங்களைந்து துன்பத்தில்
கூடியிருத்தலே நன்னட்பு



(8)
நெகிழுடை திருத்தும் கரமென்ன
பதைத்து உதவுவதே நன்னட்பு
(9)
இயன்றவரை நண்பனைத்
தாங்குவதே நன்னட்பு
(10)
பிரித்து நினைத்தல்
நல் நட்பன்று

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# நெடுக பயணம் ஏனோ?

பரி மீதோ
பயணமெனில் பரவாயில்லை.

புரவியே நாமெனில்
குந்த ஓட்டத்தில் பின் துரத்திடும்
கந்துகங்கள் ஏராளமாய்.



கடிவாளம் கட்டிய கோடகமாய்
ஓடவும் முடியாமல்.
ஒதுங்கிடவும் இயலாமல்.

படாத பாடு மனஅழுத்தத்தில்
மூழ்கடிக்க.
ஓட்டப்பாதையில் நிரந்தமான
குடில் ஒன்றிட்டு குடி புக
வேண்டியே இந்த போராட்டம்.

இந்த கலியுக அவனியில்
கரம் தந்து மேல் தூக்க
ஒருவருமில்லை.

பிடித்த கரம் உதரி
புதையில் தள்ள அடுத்தடுத்த
துரோகமும்
துயரமும்

பாதுகாப்பாக ஓடுங்கள்
குதிரை போலவே
வெகுவேகமாய்.

வெற்றி கண்ட பின்
நிறுத்தம் அமையுங்கள்.

கவிஞர் சு. கார்த்திகா, பழநி

# உணர்வுகள்

இன்றைய உலகம் மதியாது செல்லுதே
மனித உணர்வுகளை மிதித்து எறியுதே
உணர்வுகளை வெளிக்காட்ட உள்ளம் மறுக்குதே
இதனை எண்ணியே வாழ்வே வெறுக்குதே
வெறுமை உலகில் தனிமை காக்குதே



முன்னேறிச் சென்றிட முழுவதுமாக ஆசை
முடங்கிக் கிடக்குது உள்ளத்தின் வேட்கை
வெளியே கொட்டிட அச்சமே அகத்திலே
மதியாத உலகிலே உறவுகள் இருப்பதாலே
அனைத்தும் உள்ளத்தை நாளும் நனைக்கிறதே

பெண் என்றால் உலகிலே தியாகியே
அனைத்தையும் அடக்கி வைக்கும் பொம்மையே
வெளியே விட்டால் சுடுசொற்கள் விழுமே
துணிந்து எழுந்தால் குடும்பமே எதிர்க்குமே
இவர்களின் நடுவே பெண்மையின் வாழ்வே

உலகிலே உணர்வுகள் மதிக்கப்பட வேண்டுமே
உலகமே பெண்மையை போற்ற வேண்டுமே
அவர்களின் வேட்கைக்கு இடையூறு வேண்டாமே
நேரான பாதைக்கு வழி காட்டுவோமே
உணர்வுகளை மிதியாது மதித்து வாழ்வோம்

கவிஞர் எச். டீ. எச் பஷீதா, கொழும்பு

# வாழ்வின் யதார்த்தம்

இருக்கும் வரை இன்பம் தந்த உறவுகள்
இடையிலே சொல்லாமல் இல்லாமல் போகையில்

இதயங்களில் நீங்காத
வலியையும் வடுவையும் தந்தவாறே செல்கிறது

நாளையும் அதை மறந்தவாறே நகர்கிறது
அடுத்துவரும் இன்பதுன்பத்தை நாடி.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு, இலங்கை

# தேன்மொழிப் பேச்சு

என்னை சுற்றி சுற்றி வந்து
இந்த மஞ்சள் வண்ணத்துப்பூச்சி
ஏதோ கூற முயன்றது

கருநிற வண்ணத்துப்பூச்சிக்கு
தன்னுடைமை யென்ற பீற்றலில்
தன்மொழிப் பேசி இட்டுச் சென்றது

தேன் மொழிப் பேச்சு
எனக்கும் கொஞ்சம் புரிந்து
என் கண்கள் சிரித்ததில்
இவ் விரண்டும்
கண்டும் காணாததுபோல்
சிறகடித்துச் சென்றன.



கவிஞர் ஜெயப்பிரபா

# முயன்று முன்னேறு

ஆரம்பத்தில் அதி சிரமம்
நடுவில் தொங்கோட்டம்
இறுதியில் பெரு விருட்சம்
அதுவே முயற்சியெனும்
முழு உலகம்



தூக்கம் தொலைத்து
உணர்வுகள் மறந்து
ஆசைகளை நிராகரித்து
அல்லல்களை சகித்து
முன்னேறுதல் வெற்றியின் வழி

சிலர் நகைப்பர்
பலர் வெறுப்பர்
இன்னும் சிலர் எள்ளி நகையாடுவர்
அது தாண்டிப் பலர் கூக்குரலிடுவர்
உன்னால் முடியாதென

அத்தனையும் தாண்டி
முடியுமென ஓடி
நாளும் தினமும் தேடி
பெறப்படும் முயற்சியில்
முன்னேறுவதே உயிர் நாடி

முடிவாய் சொல்கிறேன்
முடிந்தவரை முயற்சி செய்
முடியாதென்பதை தகர்த்தெறி
முயற்சி உன் பக்கம்
முன்னேற்றம் நம் பக்கம்

கவிஞர் ஷிப்ரா இல்முத்தீன், அட்டாளைச்சேனை (இலங்கை)

# கோபம்

வறுமையை
நீக்க முடியவில்லை என்ற
கோபத்தில்
பலத்த மழை.



கவிஞர் அ. செல்வராஜ், உடுமலைப்பேட்டை




உயிரே, மெய்யே
உள்ளமெல்லாம்
நிறைந்த எழிலே
கட்டிக் கரும்பே
கனியிடையிட்ட சாறே
கண்மணியே உனக்கு.

சங்க நூல்களில்
பாட்டெடுத்து.
சந்தம் மாறாமல்
சொல்லெடுத்து.
பேறாகப் பெற்ற
பிள்ளைக் கனியமுதிற்குப்
பாடிடுவேன் தாலாட்டு.

ஆற்றுப் படையிலே
அழகான சொல்லெடுத்து
தேற்றுகிறேன் உன்னைத்
தேன் மொழியே
கண்ணுறங்கு.

நற்கணக்கிலே சிலம்பு செய்து
பொற்பாதங்களுக்குப் பூட்டிடுவேன்.
நறவமே நறுங்கனியே
உறவாக நானிருப்பேன்
கண்ணுறங்கு.

எட்டுத்தொகை நூலெடுத்து
பட்டுத் துணியும் நெய்திடுவேன்.
நட்டு வைத்த பசுந்தளிரே.
நாளும் செழித்து வளர்வாயோ.

நெஞ்சமெல்லாம் நிறைந்த தமிழே.
துஞ்சாமல் நீயும் இருப்பதென்ன.
அகநானூற்றுக் காவியமே.
புறநானூற்று ஓவியமே
பூந்தளிரே கண்ணுறங்கு.

அழகே, அமுதே, விழியே, மொழியே.
திகட்டாத தெள்ளமுதே
குழந்தைத் தமிழே.
கண்ணுறங்கு.


கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன் கோவை மாவட்டம்

# இலக்கே இலக்கு

போகும் பாதை
தொலைவாய்த் தெரிந்திடும்
இடர்களும் தடைகளும்
இன்னல் தந்திடும்

துயர்தனைத் துடைத்திடும்
மனத்திடம் கொண்டிடு
வியர்வை வெளியேற
நிதமும் உழைத்திடு



வரவும் செலவும்
வாழ்க்கையில் விளையாடும்
வாழும் வழிக்காக
விழிபிதுங்கி நிற்காதே

முன்வைத்த காலை
பின்னே இழுக்காது
தன்மான உணர்ச்சியுடன்
முன்னேறிச் சென்றிடு

இலக்கை நோக்கியே
கவனத்தைச் செலுத்து
வெற்றிக் களிப்பு
தூரத்தில் இல்லை

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹார், இலங்கை

இயற்கையா ஆனாலும்
இறைவன் ஆனாலும்
காதல் ஆனாலும்
கவலை ஆனாலும்
கன்னியின் கண்ணிமைகள் ஆனாலும்
கலையும் கனவு ஆனாலும்
காற்றின் வருடல் ஆனாலும்
காலத்தின் மாற்றம் ஆனாலும்
கண்ணில் காட்சி படுத்தும்
குவியமில்லா காட்சிப் பேழை
கவிதைகள்



கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

# அலையும் தென்றலே

என் கூந்தலில் வைத்த
மலர் வாடுவதற்குள்
காதலை துறந்து தூரம்
செல்கிறாய்

மாயங்கள் என்று தெரிந்தும்
மகுடி போல் மயங்கிய
மனதை பதற வைக்குது

வலைக்குள் சிக்கிய மீனாய்
எரித்துவிடு என எச்சரிக்கை
செய்யும் உறவுகளின் கூச்சலில்
கலைந்த கனவுகளை புதைத்தேன்

அழியாதது எதுவென
தேடுகையில்
அழித்து சென்ற ஆழியின்
ஓலமாய் அவதி
காதலின் மருகலில்
காதலும் காணாமல்
ஒரு வரிக் கவிதையாய்
இருவேறு துணையில்



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# என் பெண்மை

உன் பாசத்தில்
நான் கரைகையில்
கண்ணோரம் துளிர்க்கும்
கண்ணீர்த் துளி

உன்னை நினைத்து
உன்மத்தம் கொள்கையில்
திரண்டு நிற்கும்
என் பெண்மை

உள்ளுக்குள்.
உயிர்வேதி மாற்றங்களால்
சுரந்து நிற்கும்
ஊக்கி

உன் அன்பென்னும்
கடலில் மூழ்கிடத்
துடிக்கும்
என் ஒற்றைத்
துளி உயிர்.



கவிஞர் அ. ஈஷத் ரேனா, புதுக்கோட்டை

# மனம் கொள்ளை போகுமே

பனிப்படர்ந்த மலையின்
பருவப் பெண் போன்ற அழகு!

ஆகாய வீதியில் அழகான மேகங்களின்
அற்புத உருவங்கள் கற்பனைக்கு தீனி

அதிகாலை நேரத்தில் பறவைகளின் தேனிசை பாடல்

அம்மா என அழைக்கும் பசுவின் குரல்
நினைத்தாலே மனம் கொள்ளை போகும் சுகம்.

தமிழில் பெருமை நினைத்தால் மகிழும் அகம்
தமிழுக்கென்று ஆயிரம் வரலாறு
உயிரோடு கலந்த உன்னதத் தமிழ்

தமிழ் வேறு உயிர் வேறு பிரிக்க முடியாத பாங்கு
இலக்கியத்தின் வேரூ தமிழில் மட்டுமே உண்டு.

சலசலக்கும் மழை .
ஓவென்று கொட்டும் அருவி
தென்றல் வருடும் காற்று
கூவும் குயில், கொக்கரிக்கும் கோழி,
கன்றை அழைக்கும் பசு.




இயற்கையும் மனிதனும் ஒன்றி வாழ்ந்த
அந்த நாட்கள் நினைத்தாலே
மனம் கொள்ளை போகும் அதிசயம்.

இதயம் தொட்ட நினைவுகள் இசைவான வாழ்வியல்
நினைத்தாலே மனம் இனிக்கின்ற சுகம்.
மறக்க முடியாத தமிழும்
தமிழனின் வாழ்வும் என்றும் சொர்க்கமே.

கவிஞர் ஜேபி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# பரமபதம்

ஏணிகளும்
பாம்புகளும்
மாறி மாறி
பிணைந்திருக்கும்
பரமபதம் வாழ்க்கை
ஒவ்வொரு நகரத்திலும்
கவனமாக இருங்கள்
உங்கள் காலைச் சுற்றுவது
பாம்பாக வரும்
இருக்கலாம்



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# பிழை

நிலைத்தடுமாறிடும் போது
பிழையென்றதற்குள்
வீழ்ந்து தத்தளிக்கும்போது
தோள் தடவி ஆறுதல் சொல்லிடாது போனாலும்
மனம் சிதைக்கும் பாணியில் நடந்திடுவதேனோ
செய்த பிழையை அடையாளமிட்டு
குத்தி குதறியது தெரிந்தாலும்
தெரியாமல் கடந்திடுவதோ
ஒன்றும் புரியாமல் அல்ல
உம் உறவுகளை தக்க வைத்திடத்தான்
இந்த தள்ளட்டம் நின்று போவதுமில்லை
நிறுத்தி விட விடுவதுமில்லை
கண்ணீர் கன்னம் நனைந்தாலும்
இங்கு புரிய வைக்கமுடிவதில்லை



கவிஞர் சுஹ்னாஸ் பேகம், முதிலைப்பாளி (இலங்கை)

# மாலவனும் வைணவமும்

## பகுதி 41

## ஆண்டாள் பகுதி 11 நாச்சியார் திருமொழி பகுதி 3
## பாசுரம் 6முதல் 10முடிய முதல் திருமொழி முற்றும்



ஆண்டாள்தன் நாச்சியார்தம் திருமொழிகள் பதினான்கில்
முதலதனின் ஆறாவது பாசுரத்தில் சத்வருணத்தர்
கூட்டத்தே பகவானை அனுபவித்தல் போன்றதுவாய்
காமஸாஸ்த்திர வல்லாரொடு எம்பெருமான் தனையடைய
காமனையே வேண்டுகிறாள்! எழிலுருவம் இளமையதும்
நற்பணிவும் புணர்ச்சியதால் கூடவல்லார் தம்மோடு
காமனையே வேண்டுகிறாள்! பெருமாள்தன் திருக்கண்களால்
திருத்தமாக நோக்கிடவே திருவருளை பெற்றளிக்க
மன்மதனை வேண்டுகிறாள்! வடிவழகும் நற்பண்பும்
காமநூலில் வல்லாரொடு வீதிகளிலே தான்நோக்கி
காமதேவனை வணங்குகிறாள்! எம்பெருமான் கடாக்ஷிக்க
அருள்செயவே பிரார்த்திக்கிறாள்! ஏழாவதில் எம்பெருமான்
அருட்கரத்தால் மெய்தழுவ தன்னார்வம் உணர்த்துகிறாள்!
ஈதமைய மன்மதன்தன் நற்றுணையை நாடுகிறாள்!
தன்மார்பும் எழில்வயிறும் அவன்சார விழைகிறாள்!
நிலைநின்ற மாப்புகழை நண்ணுமென நம்புகிறாள்!
எட்டாவது பாசுரத்தே எம்பெருமான் தாள்பணிய
நல்லருளை வேண்டுகிறாள்! தன்பெண்மை சீர்த்திபெற
கேசவனைக் கால்பிடிக்கும் பேறுவேண்டி நிற்கிறாள்!
மெய்தூய்மை காணாதே விரிகுழலை கொண்டவளாய்
செவ்விதழ்கள் வெண்மையுற ஒரேவேளை ஊண்கொண்டு
தான்நோற்கும் நோன்பதனை நினைவில்கொள அன்னவனை
வேண்டுவளாய் திருமாலின் திருவடிக்கு சேவைசெய்
பேறதனை பெற்றுத்தர கோருகிறாள்! ஒன்பதிலே
வேண்டுவன அருளாவிடில் அநர்த்தங்கள் சாருமென
என்றவளும் எச்சரித்து தன்தோத்திரம் பலனின்றேல்
தன்துயரின் விளைபவைகள் சேர்ந்திடுமே என்கிறாள்!
ஈற்றமைந்த பத்தாவதில் பலனுரைத்தல் காண்கின்றோம்,!
கரும்புவில் மலரம்பு கொள்காமன் சாமனிடம்
தனைசேர்க்க பாபத்தும் நவில்பவர்கள் வைகுந்தமே!

கவிஞர் கணக்காயர் (இ. சே. இராமன்)

# வாழ்த்து மடல்

அழகு மிகுந்த அன்னைத் தமிழே!
ஆசையாய் பலரும் கற்றிடும் ஆருயிர்த் தமிழே!

இன்னிசையாய் வலம் வரும் இயல்புத் தமிழே!
ஈகையின் பண்பாட்டைஉணர்த்தும் ஈரடித் தமிழே!

உலகமே வியந்து போற்றும் உன்னதத் தமிழே!
ஊராரும் போற்றும் உத்வேகத் தமிழே!

எழுச்சியை ஊட்டிடும் என்னுயிர் தமிழே!
ஏணியாய் நின்று உதவிடும் ஏற்றமிகு தமிழே!

ஐயம் களைந்த அற்புதத் தமிழே!
ஒற்றுமையை உணர்த்தும் தமிழே!

ஓதுவதற்கு உகந்த தமிழே!
ஔவை தந்த ஔகாரத் தமிழே!
எஃகு போன்ற உறுதியான எங்கள் தமிழே!




தமிழன்னையே உனக்கு எங்களின் தமிழ் வணக்கம்!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# அச்சம் தவிர்!

உருவிற் சிறிதாய் ஓரிடத்தில் உருவாகி
விரிந்து படர்ந்து பயணிக்கும் நதி!
பாய்ந்து வந்த பாதைகளில் அமைந்த
வயல்களை பசுமையாக்கி, ஊர்களை வளமாக்கி
கடலைச் சென்றடைதல் நதியின் விதியாகும்!
கடலினில் கலக்கும் முன்னர் தான்
கடந்து வந்த பாதையைத் திரும்பிப்
பார்க்கும் நதி, இத்தனையும் துறந்து
வாரியில் கலந்து மறைவதா? என்றெண்ணி
மனநடுக்கம் கொள்கிறது! வந்தவழியில் திரும்பிச்
சென்றிடவும் இயலாது! ஆழியில் கலப்பதைத்
தவிர்த்திட இயலாது! தயங்குவதால் பயனில்லை!
அச்சமதை நீக்கி அபாயத்தை துச்சமாய்
எதிர்கொண்டால் நதியின் பயம் விலகும்!
வாரியில் கலந்த நதி மறைந்திடும்!
ஆறு என்பது மாறிடும் கடலாக!



கலீல் கிப்ரான்

எனைக் கவர்ந்த கலீல் ஜிப்ரானின்
கவிதை வரிகளிவை! மனித வாழ்வியலை
நதியின் பயணத்தால் நமக்கு விளங்கவைத்து
எதற்கும் அஞ்சாமல் வாழ்வை எதிர்கொண்டு
சாதனைகள் படைக்கத் தூண்டும் கவிதையிது!
கலீல் ஜிப்ரானின் கவிதையினை தமிழிலே
வார மின்னிதழுக்கு வழங்குகின்றேன்! ஏதேனும்
குற்றம் குறையிருப்பின் பொறுத்தருள வேண்டுகிறேன்!

கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரீ, புதுச்சேரி

# மாற்றம்

ஆசையாக தொடங்கியது
பிடித்துப்போக அனுபவமானது
அலைந்து திரிந்து
உழைத்து களைத்து
வீடு திரும்பும்
அன்றாடம் காட்சியின்
வாழ்வில்
அடிக்கடி நிகழும்
நிதர்சனமான நிர்பந்தமாக
மாறிப்போனது
படியில் பயணம்



கவிஞர் கரு. ராமச்சந்திரன், அருப்புக்கோட்டை

# நிறம்

கோபத்தில் சிவப்பு நிறம்!
செழுமையில் பச்சை நிறம்!
மங்கையவள் கடக்கையிலே
வெளிறியதே வான்நீலம்!
கூந்தலோ கார்மேகம்!
மேனியெழில் பசும் பொன்னிறம்!
மங்கையவள் மனதோ வெள்ளை!
அவளைக் காணும் தருணங்கள்
வர்ணஜாலங்கள்!
நெஞ்சமெல்லாம் நிறைந்திடும்
வானவில் தோட்டம்!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# பரண் ஏறும் பட்டதாரிகள்

வீட்டின் மையத்தை ஆக்கிரமித்த தொலைக்காட்சி பெட்டியும்
ஏரியல் இருப்பதே வீட்டுக்கு பெருமையாயும்
ரேடியோவில் பாட்டு கேட்டு மகிழ்வதும்
அந்த காலம் என மறைந்தது இன்று

விடியற்காலையில் தோளில் கலப்பையுடன் செல்வதும்
ஜோடி மாடுகளை விரட்டியபடி தண்ணீர் இறைப்பதும்
மரம் ஏறி தேன் எடுத்ததும்
மலை ஏறி பூ பறிப்பதும் மறந்து போயாச்சு



காட்டுல புல் அறுத்து கம்மாவில் நீச்சலடித்து
ஐந்தாறு சுள்ளி பொறுக்கி அடுப்பிலே பொங்கியதும்
இரவெல்லாம் கண் விழிச்சி மாட்டுக்கு பிரசவம் பார்த்து
விடிஞ்சதும் சீம்பால் காய்ச்சி ஊருக்கே பரிமாறினதும்

மறைவுகட்டி பால்கறந்ததும் மறந்தே போச்சு
ஆத்துல மீன்பிடிச்சு அங்கேயே அதை உரசி
சேத்துல நண்டு பிடிச்சு சாறெடுத்து சமைச்சதும்
சலிக்காத நிகழ்வெல்லாம் எப்படியோ மறைஞ்சிடுச்சி

வேலையில்லாம யாருமே வீட்டில இருந்ததில்லை
கலப்பைய தோளுல தூக்குனத விட்டு கலர் பைய்ய தூக்கினதும்
சேற்றில கால் வைக்க விரும்பாம ஷுவுக்கு மாறினதும்
உழைப்புக்கு முழுக்கு போட்டு உட்கார்ந்து சம்பாதிப்பதும்

படித்து முடித்ததும் வேலையில்லா திண்டாடத்தில் நிறுத்திடுச்சு
படிப்பு சம்பாதிக்க அல்ல சம்பாதிப்பதை பாதுகாக்கன்னும்
சம்பாத்தியம் படிப்பை சார்ந்ததல்ல உழைப்பை சார்ந்ததுன்னும்
யோசிக்கவே தோணாம இளசுக சொகுசு தேடுது


இன்று பயன்பாட்டில் இல்லாத அனைத்தும்
தொலைகாட்சி பெட்டியும் ஆண்டனாவும் வானொலியும்
என்றோ தேவையற்ற பொருட்களாக பரண் ஏறி விட்டது
படித்துவிட்டு வேலைக்காக காத்திருக்கும் பட்டதாரியே விழித்துக் கொள்

வாய்ப்பை நீயே உருவாக்கு இல்லையெனில்
உன்னையும் பரண் ஏற்றும் வாய்ப்பை இச்சமூகம் தந்துவிடும்

கவிஞர் பி. ரோஜாராணி, தேனி

# தேசிக விநாயகம் பிள்ளை

## பிறப்பு, கல்வி




தேசிகவிநாயகம் பிள்ளை என்ற கவிமணி ஜூலை 27, 1876-ல் தென்திருவிதாங்கூரில் (இன்றைய கன்னியாகுமரி மாவட்டம்) தேரூர் என்ற ஊரில் சிவதாணுப்பிள்ளை, ஆதிலட்சுமி இணையருக்கு இரண்டு பெண் குழந்தைகளுக்குப் பிறகு மூன்றாவது மகனாக பிறந்தார். கவிமணியின் பாட்டனார் மாணிக்கவாசகம் பிள்ளை தமிழறிஞர், காரியந்தாதி என்னும் நூலின் ஆசிரியர். கவிமணியின் தாய்மாமன் சொற்பொழிவாளரான கம்பராமாயணம் பாலசுப்ரமணிய பிள்ளை. கவிமணியின் மனைவியின் தமையன் சங்கரநாராயண பிள்ளையும் கம்பராமாயணச் சொற்பொழிவாளர்.
கவிமணியின் தந்தை சிவதாணுப்பிள்ளை அழகியபாண்டிபுரம் உப்புப் பண்டகசாலையில் கண்காணிப்பாளராக திருவிதாங்கூர் அரசு ஊழியராகப் பணியாற்றினார். கவிமணியின் அன்னை ஆதிலட்சுமியின் தந்தை மாணிக்கவாசகம் பிள்ளை நாகப்பட்டினத்தில் கப்பல் வணிகம் செய்து வந்தவர்.

கவிமணி இளவயதில் மலையாளம் படித்தாலும் தமிழை கற்றுக் கொண்டார். தேரூர் திருவாவடுதுறை தம்புரானிடம் இலக்கிய இலக்கணங்களைக் கற்றார். தனது ஒன்பதாவது வயதில் தன் தந்தையை இழந்தார். புகுமுக வகுப்பான எஃப்.ஏ. படித்த கவிமணி கல்லூரிப்படிப்பை தொடரவில்லை. பின்னர் ஆசிரியர் பயிற்சி படித்தார். தேரூர் அருகே திருவாவடுதுறை மடத்திற்கு சொந்தமான மடத்தில் தங்கியிருந்த சாந்தலிங்கத் தம்புரான் என்பவரிடம் தமிழ் பக்தி இலக்கியங்களை பாடம் கேட்டார்.

**தனிவாழ்க்கை**

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை தான் படித்த கோட்டார் ஆரம்பப்பள்ளியிலேயே ஆசிரியர் ஆனார். 1901-1902-ல் நாகர்கோவில் ஆசிரியர் பயிற்சிப்பள்ளியிலும், 1902-1931-ல் திருவனந்தபுரம் பெண்கள் கல்லூரியிலும் ஆசிரியப்பணி புரிந்தார். அங்கே கல்லூரித்தலைவியாக வந்த ஓர் அம்மையாருடனான கருத்துவேறுபாட்டால் பதவியை துறந்து நாகர்கோயில் திரும்பினார்.

கவிமணி உமையம்மை எனும் பெண்ணை 1901-ல் மணம் முடித்தார். குழந்தைப்பேறு இல்லாத கவிமணி தனது அக்காள் மகன் சிவதாணுவை தனது மகன் போலவே வளர்த்தார்.



1931-1954-ம் ஆண்டுகளில் நாஞ்சில் நாட்டுப் புத்தேரியில் வாழ்ந்த காலக்கட்டத்தில் கு. அழகிரிசாமி, டி.கே சாமிநாத சர்மா போன்ற அறிஞர்கள், இராஜாஜி, சிவாஜிகணேசன், என்.எஸ். கிருஷ்ணன், எம்.கே.டி. பாகவதர் என அன்றைய பிரபலங்கள் எல்லோரும் அவரைச் சந்தித்துள்ளனர். அவரது சமகாலக் கவிஞர்களில் மிகவும் மதிக்கப்பட்டதற்கு அவர் சிறந்த உரையாடல்காரர் என்பதும் கூடக் காரணம் என்கிறார் சுந்தர ராமசாமி.

**இலக்கிய நண்பர்கள்**

கவிமணி ஓர் இலக்கிய மையமாகத் திகழ்ந்தார். எஸ். வையாபுரிப் பிள்ளை, கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி , டி.கே.சிதம்பரநாத முதலியார் ,கல்கி , கே.என். சிவராஜ பிள்ளை ஔவை டி.கே.சண்முகம், ப.ஜீவானந்தம் , அ.சீனிவாசராகவன் , மீ.ப. சோமு என அவருடைய நட்புவட்டம் மிகப்பெரியது. கல்வெட்டாய்வு, வரலாற்றாய்வு, இலக்கியம் ஆகிய தளங்களில் அவர் அவர்களுடன் தொடர் உரையாடலில் இருந்தார்.

## இலக்கிய வாழ்க்கை

கவிமணி தன் இருபது வயதில் கவிதைகள் எழுத ஆரம்பித்துவிட்டார். அவர் இயற்றிய பாடல்களில் சிந்து, கும்மி ஆகிய நாட்டார் பாடல் வடிவங்கள் பெருமளவில் பயின்றுவருகின்றன. நாட்டார் பாடல் வடிவங்களான தாலாட்டு, ஒப்பாரி ஆகியனவும் பழமொழிகள், நம்பிக்கைகள், வழக்காறுகள், வாய்மொழி ஆகியனவும் விரவி வருகின்றன.

## குழந்தையிலக்கியம்

தமிழின் முதல் குழந்தைக் கவிஞர் என கவிமணி குறிப்பிடப்படுவதுண்டு. 'Baby' என்னும் ஆங்கிலப் பாடல் ஒன்றினைத் தமிழில் 'குழந்தை' என்னும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். 'மலரும் மாலையும்' தொகுதியில் உள்ள முத்தந்தா, காக்காய், கோழி என எட்டுக்கும் மேற்பட்ட தலைப்புகளில் உள்ள பாடல்கள் நாட்டார்க் குழந்தைப் பாடல் வடிவம்கொண்டவை.

## நாஞ்சில்நாட்டு மருமக்கள்வழி மான்மியம் (1942)

கவிமணியின் முக்கியமான படைப்பாக இன்று கருதப்படுவது நாஞ்சில்நாட்டு மருமக்கள்வழி மான்மியம். இது தமிழின் முதல் எள்ளல் நூல் என்றும் குமரிமாவட்ட வட்டார வழக்கு இலக்கியத்தின் முன்னோடி நூல் என்றும் கருதப்படுகிறது


## ஆசியஜோதி (1941)

எட்வின் ஆர்னால்டின் "Light Of Asia" நூலைத் தழுவி தமிழில் 'ஆசிய ஜோதி' என்ற நூலை கவிமணி எழுதினார். இந்தியா எங்கும் எட்வின் ஆர்னால்டின் கவிதையின் வெவ்வேறு வடிவங்கள் வெளிவந்துள்ளன. அவற்றில் ஆசியஜோதி முக்கியமானது.

## பிறநூல்கள்

ஸ்ரீவைகுண்டம் சுப்பிரமணிய பிள்ளை என்பவர் கவிமணியின் சில பாடல்களை 1932-ல் வெளியிட்டார்.
1938-ல் மு. அருணாசலம் வேறு பாடல்களையும் தொகுத்து மலரும் மாலையும் என்னும் தலைப்பில் ஒரு நூல் வெளியிட்டார்.
கவிமணியின் உரைமணிகள் (1952),
தேவியின் கீர்த்தனைகள் (1953) போன்ற நூல்கள் பின்னர் வந்தன.
பாரசீகக் கவிஞர் உமர் கய்யாம் பாடல்களைத் தழுவி "ரூபாயத்" எனும் தலைப்பில் தமிழில் எழுதினார்.

## ஆன்மிகம்



கவிமணிக்கு மத நம்பிக்கை உண்டு. முந்தைய மதத்திற்கும் சமகால மதத்திற்கும் உள்ள நீண்ட வேறுபாட்டை அனுசரித்து நடக்க வேண்டும் என்பது அவரது கொள்கை (தினமணி ஜூலை 5, 1954). கவிமணியிடம் சடங்குப் பற்று இருந்ததில்லை.

## விருதுகள்

டிசம்பர் 24, 1940-ல் தன் 64-ம் வயதில், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்வேள் உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் "கவிமணி" என்ற பட்டம் வழங்கினார்.
1943-ல் அண்ணாமலை அரசர் ஆத்தங்குடியில் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். பெரும் பொருள் வழங்க முன் வந்தபோது அத்தொகையை தான் ஏற்க மறுத்து திருவிதாங்கூர் பல்கலைக்கு அளித்து பி.ஏ. வகுப்பில் தமிழில் முதல்பரிசு பெறும் மாணவர்களுக்கு உதவித்தொகையாக அளிக்க ஏற்பாடு செய்தார்.

# தேசிக விநாயகம் பிள்ளை

## நூல்கள்

- கவிதை
- அழகம்மை ஆசிரிய விருத்தம் (கவிமணி இயற்றிய முதல் நூல்)
- மலரும் மாலையும் (1938)
- கதர் பிறந்த கதை (1947)
- தேவியின் கீர்த்தனங்கள்
- குழந்தைச்செல்வம்
- புனைவு
- நாஞ்சில்நாட்டு மருமக்கள்வழி மான்மியம் (1942)

மொழியாக்கம்

- உமார் கய்யாம் பாடல்கள் (1945)
- ஆசிய ஜோதி (1941)

கட்டுரை

- கவிமணியின் உரைமணிகள்
- தீண்டாதார் விண்ணப்பம்

ஆய்வுநூல்

- காந்தளூர் சாலை

நினைவு நூல்கள்



கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் படைப்புகள் 1998-ல் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டன.

## மறைவு

கவிமணி இறுதிக்காலம் வரை புத்தேரி என்ற ஊரில் வாழ்ந்தார். செப்டம்பர் 26, 1954-ல் காலமானார்.

## நன்றி

https://tamil.wiki/தேசிகவினாயகம்_பிள்ளை

அ.வில்சன், இதழாசிரியர்

நாளை
# நமதே

அடுத்தவரோடு ஒப்பிட்டு
உனை நீ
தாழ்த்திக் கொள்ளாதே
உலகத்தில் சிறந்தது
உனக்கு நீயே.

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை



தொடர்பிற்கு :

9597887847
8870884969

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com